இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம்

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல்

1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் சட்டத்தின் விதிமுறைகள் பிரகாரம் 14853/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு தகுதி வாய்ந்த உள்வாரி மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உதவிப் பொது முகாமையாளர் (நிதி) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / கணக்கியல் / நிதி முகாமைத்துவம்/ வர்த்தகமாணிப் பட்டம்

அத்துடன்

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

02. உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / சட்டம் / வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / வியாபார நிர்வாகத்தில் பெற்றுக்கொண்ட பட்டம்

அத்துடன்

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03. பிரதான மருத்துவ அதிகாரி - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவம் அல்லது சத்திரசிகிச்சையாளர் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

HM 1-1 சேவை வகுதிக்கு

தகைமைகள்

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) Iஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வயது:

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

சம்பள அளவு:

HM – 1-1 - ரூபா 140,640 – 15 x4,100 – 202,140/- சம்பள அளவில் 2026-01-01ஆம் திகதியில் ஆரம்ப சம்பள அளவான ரூபா 123,019.00, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

2026-01-01ஆம் திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 123,019.00 ரூபாவாகும்.

இதற்குரித்தான மேலதிக கொடுப்பனவுகள்

- தொழில்சார் கொடுப்பனவு
- வாழ்க்கைச் செலவுப் படி
- மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு
- போக்குவரத்துக் கொடுப்பனவு
- தொலைபேசி கொடுப்பனவு

(01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

04. உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மேம்பாடு) - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ சந்தைப்படுத்தல் / வர்த்தகப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை வகுதியில் (MA) IIஆம் தர சந்தைப்படுத்தல் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

05. தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04 அல்லது 05)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சிவில் பொறியியல் விசேடத்துவ துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) (NDT) பெற்றிருத்தல்.

(3) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறனில் NVQ ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் இரண்டு (02) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் NVQ ஆறாம் (06) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் ஐந்து (05) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் NVQ ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் பத்து (10) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை வகுதியில் (MA 2-1) IIஆம் சிவில் துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

06. தொழில்நுட்ப அதிகாரி (பொறிமுறை/ மின்னியல்) - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04 அல்லது 05)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சிவில் பொறியியல் விசேடத்துவ துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) (NDT) பெற்றிருத்தல்.

(3) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறனில் NVQ ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் இரண்டு (02) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் NVQ ஆறாம் (06) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் ஐந்து (05) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் NVQ ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் பத்து (10) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை வகுதியில் (MA 2-1) IIஆம் சிவில் துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

07. வழங்கல் அதிகாரி - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வர்த்தகம்/ சந்தைப்படுத்தல்/ பொருளியல்/ வியாபார நிர்வாகம்/ அரச நிர்வாகம்/ வியாபார முகாமைத்துவம் போன்ற பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டமொன்று அல்லது பதவி தொடர்பான பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை வகுதியில் (MA 1-1) IIஆம் தர வழங்கல் துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

JM 1-1 சேவை வகுதிக்கு

வயது:

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உள்வாரி சம்பள அளவு:

JM – 1-1 - ரூபா 72,650 – 10 x1,360 – 18 x2,040 – 122,970/- சம்பள அளவில் 2026-01-01ஆம் திகதியில் ஆரம்ப சம்பள அளவான ரூபா 65,633.00, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

2026-01-01ஆம் திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 62,633.00 ரூபாவாகும்.

08. கணனி மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் - முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதி (MA 2-1) – 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பதவி தொடர்பான மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறனில் NVQ ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணனி மற்றும் கணனி முறைமை பராமரிப்பு தொடர்பில் குறைந்தபட்சம் இரண்டு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து செயல்முறை அனுபவத்தைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் ஏற்புடையதாகும்.

MA 2-1 சேவை வகுதிக்கு

வயது:

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

சம்பள அளவு:

MA – 2-1 - ரூபா 50,540 – 10 x540 – 7x630 – 4x 890 – 20 x 1,190 = 87,710/- சம்பள அளவில் 2026-01-01ஆம் திகதியில் ஆரம்ப சம்பள அளவான ரூபா 46,960.00, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

2026-01-01ஆம் திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 46,960.00 ரூபாவாகும்.

09. கணக்காய்வு உதவியாளர் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) சேவை வகுதி (MA 1-1) – 01 பதவி

தகைமைகள்: (கட்டாயமான பொதுத் தகைமை)

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

கல்வி

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)

போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) **பதவிக்குரித்தான ஏனைய விசேடத்துவ தகைமைகள்:**

கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் ஒரு வருடகால அனுபவம்

மற்றும்

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்திலான திறன் இயைபுடைய வேளையில் தகைமையொன்றாக உள்ளடக்கப்படலாம்)

10. நிலையப் பொறுப்பதிகாரி (களஞ்சியசால்) - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) – 01 பதவிகள் (நாடெங்கிலுமுள்ள இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளுடன் இணைக்கப்படுவர்)

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

கல்வி

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)

போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) **பதவிக்குரித்தான ஏனைய விசேடத்துவ தகைமைகள்:**

அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் களஞ்சியப்படுத்தல் தொடர்பான கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் ஒரு வருடகால அனுபவம்

மற்றும்

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்திலான திறன் இயைபுடைய வேளையில் தகைமையொன்றாக உள்ளடக்கப்படலாம்)

உள்ளக விண்ணப்பதாரிகள்

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற, அரைத் தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதியில் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)

போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியான 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:

ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக/ சமயாசமய சேவைக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

MA 1-1 சேவை வகுதிக்கு

வயது:

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

சம்பள அளவு:

MA – 1-1 - ரூபா 46,220 –10x540–7 x 630 –4 x 890– 20 x 1,190 – 83,390/- சம்பள அளவில் 2026-01-01ஆம் திகதியில் ஆரம்ப சம்பள அளவான ரூபா 43,312.00, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

2026-01-01ஆம் திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 43,312.00 ரூபாவாகும்.

11. உற்பத்தி உதவியாளர் - ஆரம்பம் - ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - 08 பதவிகள்

12. களஞ்சியசாலை உதவியாளர் - ஆரம்பம் - ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - 01 பதவி

13. சாரதி உதவியாளர் - ஆரம்பம் - ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - 02 பதவிகள்

14. தொழிலாளர் - ஆரம்பம் - ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - 04 பதவிகள்

PL-1 சேவை வகுதிக்கு (11, 12, 13 மற்றும் 14 பதவிகளுக்கு)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.

வயது:

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

சம்பள அளவு:

PL – 1 - ரூபா 40,500 –10x450–10 x 490– 7 x 540 – 15 x 590 – 62,530/- சம்பள அளவில் 2026-01-01ஆம் திகதியில் ஆரம்ப சம்பள அளவான ரூபா 38,488.00, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

2026-01-01ஆம் திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 38,488.00 ரூபாவாகும்.

பொதுவான விடயங்கள்

அனைத்து விண்ணப்பதாரர்களும்

I. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரித்தான வேலைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்க்கும் முறை:

I. நியமன அதிகாரியானால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சேர்த்துக்கொள்ளும் நடைமுறைக்கமைய சேர்த்துக்கொள்ளப்படுவர்.

II. ஊழியர் சேமலாப நிதிக்கு நியமனம் பெறுபவர் 8%, பணிகொள்வோர் 12% எனும் வகையில் பங்களிப்புத் தொகை செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தின் 3% இற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முறை,

I. மேற்கூறிய பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படும் போது கவனத்திற் கொள்ளப்படும் தகைமை மற்றும் அது தொடர்பான சகல விபரங்களையும் இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் www.sladc.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

II. பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ இணையதளத்திலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரித்து பூர்த்தி செய்து தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

III. அரசாங்கத் திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப் படிவங்கள் குறித்த நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

IV. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

V. மேற்கூறிய பதவிகளில் பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

VI. விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளுதல் 2026-02-05ஆம் திகதி முடிவுறுத்தப்படும் என்பதுடன், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அன்றைய தினத்திற்கு முன் தலைவர், இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

VII. மேலும் தாமதமாகக் கிடைக்கப்பெறும், முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சான்றிதழ்களின் பிரதிகள் மூலம் உறுதி செய்யாத, முறையாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

VIII. தபாலில் தொலைந்துபோகும் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பு கூறாது.

கவனிக்கவும்:

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் அல்லது மேற்கூறிய ஆட்சேர்த்தலுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் உத்தியோகபூர்வ இணையதளத்தில் அதுபற்றி நாளது தரவேற்றம் செய்யப்படும்.

தலைவர்,
இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம்,
நாவின்ன, மஹரகம.
2026-01-21

tamilguru.lk